**பிரசார் பாரதி**
**அகில இந்திய வானொலி - சென்னை - 4**
**16 08 2025 SATURDAY 6.45 AM**
**வணக்கம்-மாநில செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- விவசாயிகளின் நலன்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளாது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.
- வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு ஜித்தன் ராம் மஞ்சி தெரிவித்துள்ளார்.
- கோகுலாஷ்டமி இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.
- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- லாவோஸில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் பட்டம் வென்றார்.

>>>>>><<<<<

விவசாயிகளின் நலன்களுக்கு எதிரான எந்த வர்த்தக ஒப்பந்தத்திலும் அரசு கையெழுத்திடாது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் உறுதிபட கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், பரஸ்பரம் பயனளிக்கக்கூடிய வகையிலான ஒப்பந்தத்தை மட்டுமே செயல்படுத்த அரசு தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

நாட்டு நலன் மற்றும் விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டே மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு ஜித்தன் ராம் மஞ்சி தெரிவித்துள்ளார்.

*புதுதில்லியில் உள்ள செங்கோட்டையில் நாட்டின் 79-வது சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்பதற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த தேசிய ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மையத் திட்டத்தின் பயனாளிகளுக்கு அவர் நேற்று மதிய விருந்தளித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், தேசிய ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மையத் திட்டம், பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த தொழில்முனைவோர்களுக்கு வாய்ப்புக்களை விரிவுபடுத்தியுள்ளதாக கூறினார்.*

*நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்த்லஜே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையின் வளர்ச்சிக்கானத் திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு முனைப்புடன் உள்ளதாக தெரிவித்தார்.*

*வரும் 2047 - ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.*

*>>>>>><<<<<*

*கோகுலாஷ்டமி இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.*

*இதனை முன்னிட்டு, நாடுமுழுவதும் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக குடியரசுத் தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வாழ்க்கை மற்றும் அவரது போதனைகளை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இந்த பண்டிகையின் போது சமூகத்தையும் தேசத்தையும் வலிமையாக்க நாம் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.*

*கோகலாஷ்மியை ஒட்டி சேலத்தில் உள்ள ஸ்ரீவேணுகோபால சுவாமி திருக்கோவிலில், பெண்கள் பங்கேற்று கொலு வைத்தும், பஜனைப் பாடல்களை பாடியும் வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – விஜயகுமார் 33 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*சரக்கு மற்றும் சேவை வரியில் விரைவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள அறிவிப்பிற்கு நாடுமுழுவதிலும் உள்ள வர்த்தக நிறுவனங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன.*

வரி முறையை எளிமைப்படுத்துவதற்கும், வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை இது என்று வர்த்தகர்கள் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த சீர்திருத்த நடவடிக்கை தற்போது நடைமுறையில் உள்ள வரி விகிதங்களை குறைப்பதன் மூலம், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை அளிக்கும் என்று அந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜிஎஸ்டி விகிதங்களைக் குறைப்பது உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்த உதவிடும் என்றும், இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு எதிராக இது, போட்டித்தன்மையை அதிகரிக்க உதவிடும் என்று கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள ஆயிரத்து 150 சுங்கச்சாவடிகளில் 'Fastag - வருடாந்திர பாஸ்' நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்த புதிய வசதி செயல்பாட்டிற்கு வந்த ஒரே நாளில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பயனாளிகள் வருடாந்திர பாஸை வாங்கியுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாயை கட்டணமாக செலுத்துவதன் மூலம் ஒரு ஆண்டிற்கு அல்லது 200 முறை சுங்கச்சாவடியை கடப்பதற்காக இதனை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

அனைத்து வர்த்தகம் சாராத வாகனங்களுக்கும் இந்த வருடாந்திர Fastag முறை பொருந்தும் என்றும் அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<

நாகாலாந்து மாநில ஆளுநர் திரு. இல. கணேசன் மறைவுக்கு குடியரசுத்தலைவர், பிரதமர், முதலமைச்சர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், பொதுவாழ்வில் அவர் ஆற்றியுள்ள பணிகளுக்காக என்றென்றும் நினைவுகூரப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், சேவை மற்றும் நாட்டின் கட்டமைப்பில் அவரது பங்களிப்பு போற்றத்தக்கது என்று கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், தனது வாழ்நாளில் பல்வேறு பொறுப்புகளில் திறம்பட செயலாற்றியவர் எல். கணேசன் என்றும், இறுதிவரை அரசியல் நாகரிகத்தை கடைபிடித்து வந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என்றும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அரசு வெளியிட்டுள்ள அறிவிப்புகள் தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தூய்மைப்பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உழைக்கும் மக்களுக்கு மாநில அரசு என்றென்றும் துணைநிற்கும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் விவசாயம் மற்றும் கைத்தறி தொழில்களை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார்.

மாநிலத்தில் அனைத்து துறைகளிலும் ஊழல் முறைகேடுகள் அதிகரித்துள்ளதாக அவர் குறை கூறினார்.

பின்னர், ராணிப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தமிழகத்தில் மீண்டும் அஇஅதிமுக ஆட்சி வந்தவுடன், ஏழை மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி உறுதியளித்தார்

>>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. *Cho Hyun* இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

>>>>>><<<<<

ஜார்க்கண்ட் மாநில கல்வி அமைச்சர் திரு. ராமதாஸ் சோரன், உடல்நலக்குறைவு காரணமாக புதுதில்லியில் நேற்று காலமானார்.

>>>>>><<<<<

நாட்டின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதி, ஏழு புள்ளி மூன்று சதவீதம் அதிகரித்து, 37 புள்ளி இரண்டு நான்கு பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

>>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையின் வரலாற்றுச் சிறப்பை பிரதிபலிக்கும் அஞ்சல் முத்திரையை மத்திய மண்டல அஞ்சல்துறை தலைவர் திருமதி. நிர்மலா தேவி வெளியிட்டார்.

>>>>>><<<<<

மதுரை, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் ஆடி வெள்ளியை ஒட்டி ஆயிரத்து எட்டு திருவிளக்கு பூஜை விமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் பட்டம் வென்றார்.

லாவோஸில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் 3-0 என்ற புள்ளி கணக்கில் ஜப்பானின் *Ryōichi Yoshiyama*-வை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

>>>>>><<<<<

மைசூர் ஓபன் கோல்ப் போட்டியில் இந்தியாவின் யுவராஜ் சந்து பட்டம் வென்றார்.

மைசூருவில் நேற்று நடைபெற்ற இறுதி போட்டியில் அவர் பங்காளதேஷின் ஜமால் ஹுசைன் - ஐ வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

நடப்பாண்டில் அவர் பெறும் மூன்றாவது பட்டம் இதுவாகும்.

>>>>>><<<<<

*சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் ஸ் போட்டியில் இந்தியாவின் பிரனேஷ் சேலஞ்சர்ஸ் பட்டம் வென்றார்.*

*சென்னையில் நடைபெற்ற போட்டியில் 6 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்று அவர் வெற்றி பெற்றார்.*

*>>>>>><<<<<*

*ஆசிய துப்பாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகள் இன்று தொடங்குகிறது.*

*கஜகஸ்தானில் உள்ள ஷிம்கென்ட் நகரில் நடைபெறும் இப்போட்டிகள் இம்மாதம் 30 - ம் தேதி வரை நடைபெறுகிறது.*

*இந்தியா சார்பில் இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற மனு பாக்கர், தலைமையிலான அணியில் 164 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.*

*இதில் 28 நாடுகளைச் சேர்ந்த 734 துப்பாக்கி சுடும் வீரர்கள் பங்கேற்கின்றனர்.*

*>>>>>>END<<<<<*